# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.242/2019

வா.சா.2– குறுக்கு விசாரணை தொடர்ச்சி – நாள் 27–03–2026.

பெயர் = கரந்தமலை

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2,5 முதல் 10ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. தொடர்ச்சி–

(1) 1ம் பிரதிவாதி தனுஷ்கோடி என்பவரின் கையெழுத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்திலும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்திலும் கையெழுத்து வேறுபாடு உள்ளதை ஒப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளோமா என்றால் ஆமாம். தாவாச்சொத்தில் ஒரு பகுதியில் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் தற்போதைய கிரைய மதிப்பு ரூ.5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு சரியாகத்தெரியாது. சர்வே எண்.80/11B ல் தாவாச்சொத்தில் பிரதிவாதிகள் தான் குடியிருந்துவருகிறார்கள் என்றால் கிழக்குபக்கம் குடியிருக்கிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சர்வே எண்.80/11 சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.80/11A, சர்வே எண்.80/11B என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். படிப்பு விவரம் இல்லாததால் சரியாக குறிப்பிடவில்லை என சாட்சி கூறுகிறார்.

(2) அழகர்சாமி நாயக்கரின் வாரிசுகள் நாங்கள் தான் என்பதை நிரூபிக்க வாரிசுசான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் வக்கீலிடம் கொடுத்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். நான் சொல்வதுபோல் நீதிமன்றத்தில் வாரிசுசான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.80/11B ல் பிரதிவாதிகள் குடியிருந்துவருவதை பொறுத்து ஆட்சேபணை செய்து மனு எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. எங்கள் இடத்தில் வீடுகட்டவில்லை என்பதால் மனு எதுவும் கொடுக்கவில்லை என சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதி தனுஷ்கோடி தாய்மாமன் என்ற முறையில் கல்யாணத்திற்கு சீர்செய்தாரா என்றால் இல்லை. என் அண்ணன் நீதிமன்றத்தில் தனுஷ்கோடி தாய்மாமன் சீர் செய்திருந்தார் என சொல்லியிருந்தால் தவறு

என்றால் சரிதான். என் அப்பா இறப்புக்கு 1ம் பிரதிவாதி வந்தாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியிடம் நாங்கள் பேச்சுவார்த்தை இல்லாததற்கு காரணம் என்னவென்றால் என் அப்பாவிற்கு 8 செண்டு இடத்தை எழுதிக்கொடுத்துவிட்டு எழுதிக்கொடுக்கவில்லை என சொன்னதால் பேசவில்லை என சாட்சி கூறுகிறார்.

(3) 1ம் பிரதிவாதி எங்கள் வீட்டில் பெண் எடுக்கவில்லை என்பதால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.80/11 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1986ம் வருடம் செய்யப்பட்டது என சாட்சி கூறுகிறார். 1986ல் உட்பிரிவு செய்யப்பட்டு யாருக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் காடு என்பதால் பட்டா கொடுக்கவில்லை என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.80/11 ஆனது 80/11A, 80/11B என உட்பிரிவு செய்யப்பட்டு தனுஷ்கோடி அவரது மனைவிக்கு சர்வே எண்.80/11B ஐ தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும் பத்திரத்தை படித்துப்பார்த்த பிறகு தெரிந்து கொண்டேன். சர்வே எண்.80/11ல் மேற்குபகுதியை என் தந்தை கிரையம் பெற்றார். 8 செண்டு இடம் கிரையம் பெற்றார். மேற்படி 8 செண்டிற்கு என் தந்தை உயிருடன் இருந்தகாலத்தில் பட்டா கேட்டு மனு எதுவும் கொடுத்தாரா என்றால் காடு என்பதால் கொடுக்கவில்லை என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.80/11ல் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதியும், என் மாமா ராமசாமியும் அனுபவித்து வந்ததற்கு ஆட்சேபணை எதுவும் என் தந்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற நடவடிக்கையும் என் தந்தை உயிருடன் இருந்தகாலத்தில் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

(4) நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் என் தந்தை கிரையம் பெற்றதாக சொல்லும் ஆவணம் பற்றி சொத்துவிவரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தந்தை கிரையம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 ற்கும் பிராது சொத்துவிவரத்தில் உள்ள சொத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டதற்கு ஆட்சேபணை தெரிவித்து அதனை ரத்து செய்ய புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் காவல்நிலையத்தில் கொடுத்தேன் என சாட்சி கூறுகிறார். வருவாய் வட்டாட்சியரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா உண்மையிலேயே வா.சா.ஆ.1ன்படி தாவாச்சொத்தை கிரையம் பெற்றிருந்தால் ராமசாமி என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்போம் அவ்வாறு கிரையம் பெறவில்லை என்பதால்தான் அவரை தரப்பினராக சேர்க்காமல் பொய்யாக

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் வேறு நபரை வைத்து ஆள்மாறாட்டம் செய்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது 1ம் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தால் தாவாச்சொத்தை என் அப்பா அனுபவம் செய்திருப்பார். 1ம் பிரதிவாதியின் வகையறா அனுபவம் செய்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தான சர்வே எண்.80/11ல் எந்த பகுதி தங்களுக்கு பாத்தியப்பட்டது என நிரூபணம் செய்யாமல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தை செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(5) 1ம் பிரதிவாதி தனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தை ஆண்டனுபவித்து வந்து 2ம் பிரதிவாதிக்கு முறையாக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை, நாங்கள் கேட்டுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் ராமசாமியை தரப்பினராக சேர்க்காமல் வீம்பிற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.27 15:26:09 +0530